Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28 ந் உ ஆரம்பமான

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-சுகூ] யாழ்ப்பாணம்:- கரவரு ஆவணிமீ உகூ உ வெள்ளிக்கிழமை (14 செப்டெம்பர் 1951) [இல.-சுசு]

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

[சென்ற சனிக்கிழமை (8-9-51) யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில், மேற்படி மகாநாட்டிற்குத் தலைமைவகித்த சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் நிகழ்த்திய முன்னுரை.]

"இங்குக் கூடியுள்ள இச் சைவ மகாநாடானது அகில இலங்கைச் சைவ வாலிபசங்கம், சைவக்குருக்கள்மார் சங்கம், சைவக்கோயிலதிகாரிகள் சங்கம், வேதாகம சைவ சித்தாந்த சபை ஆகிய நான்கும் ஒன்றுசேர்ந்து கூட்டியதாகும். இவர்களது வேண்டுகோளிசைந்து இந்து ஆலய விசாரணைச் சபை அறிக்கையைப்பற்றிய அபிப்பிராயங்களைப் பொதுமக்களுக்கு மாத்திரமல்லாமல் அரசினருக்குந் தெரிவிக்கும் நோக்கத்துடன் இன்று இங்குவந்து கூடியிருக்கின்றீர்கள். இந்த விஷயமாக என்னையும் பேசும்படி மகாநாட்டைக் கூட்டியவர்கள் அழைத்தார்கள்.

இதற்கென்று நியமிக்கப்பட்ட விசாரணைச் சங்கம், குறித்த விஷயமாக விசாரணை செய்வதற்கு முந்தியே குறித்த விஷயத்தைப்பற்றித் தாங்கள் ஒரு தீர்க்கமான முடிவு செய்துகொண்டமை வருந்தத் தக்கது. அச் சங்கத்தார் செய்த 3-வது விசாரணையில் நான் அபிப்பிராயம் கூறச் சென்றவிடத்து இவர்களுடைய தீர்க்கமான நோக்கம் புலப்படக்கிடந்தது. இலங்கையிலுள்ள சைவமக்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமான சைவமக்களின் கொள்கைக்கு நேர்விரோதமானதும், திருப்தியற்றதுமான ஒரு நவீன கொள்கையை இவ் விசாரணைச் சங்கத்தினர் கைக்கொண்டிருப்பது மேலும் அதிக விசனந் தருவதாகும். இவர்களறிக்கைப் பிரதியின் 83-ம் பக்கத்திற் குறிப்பிட்டபடி இவர்களிப்பொழுது கொண்டுள்ள நவீன கொள்கை, இற்றைக்கு 22 வருஷங்களுக்கு முன்னர், தென்னிந்தியாவில் முளைத்ததாகும். தெய்வ வாக்காக நாங்கள் பாராட்டிவரும் (வடமொழியிலுள்ள வேதசிவாகமங்களை இந் நவீன கட்சியார் ஒதுக்கிவிட்டு, தமிழ்மொழியிலுள்ள 12 திருமுறைகளுக்கும், 14 சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் தொன்மையும் அதிகாரமுங் கொடுத்துள்ளனர். இக் கொள்கையினர் அங்குள்ள பிராமணர்களை வெறுத்தது மாத்திரமல்லாமல், அவர்களுடைய சொந்தப் பாஷையெனத் தவறாகமதித்து, வடமொழியையும் வெறுத்து அம்மொழியிலுள்ள வேதசிவாகமங்கள் முதலாம் பழைய சாத்திரங்களையும் வெறுக்கத் தலைப்பட்டனர். இந்தப் பிராமணத் துவேஷந்தான தனித்தமிழ்க் கட்சிக்கு வித்திட்டதெனலாம். இத்துவேஷந் தழுத்த அங்கத்தவர்கள் சிலர் தம் பெற்றோர் தங்களுக்கு வடமொழிச் சொற்கள்கொண்டிட்ட வேதாசலம், பாலகிருஷ்ணன் என்னும் நாமங்களை மறைமலை, சின்னக்கறுப்பன் என்ற தமிழ்ப்பெயர்களாக மாற்றியுள்ளார்கள். இதனால் இவர்கள் கொண்ட கிளர்ச்சி எத்தன்மைத்தென்பது எளிதில் விளங்கும்.

ஆனால், இவைகளெல்லாம் தென்னிந்தியாவிலே உண்டாகிப் பரவிய கோட்பாடுகளேயொழிய இந்த இலங்கையிலே தோன்றியனவையல்ல. இலங்கையிலே பிராமணத்துவேஷம் என்பது கிடையாதெனலாம். சமஸ்கிருதம் பிராமணர்களுக்குரிய சொந்தப் பாஷையென்ற தவறான கொள்கையும் இந்நாட்டிலில்லையெனலாம். வேதசிவாகமங்களே எமது சமய ஆதார நூல்களாக இலங்கையில் உள்ள நாங்கள் கைக்கொண்டுள்ளோம். ஆனால் மேற்படி விசாரணைச்சபையார் தென்னிந்தியாவிலுள்ள புதிய கொள்கையினைப் பின்பற்றிச் சைவ சமயத்துக்கு மூலநூல்கள் 12 திருமுறைகளும் 14 சித்தாந்த சாஸ்திரங்களும் இவற்றோடு முரண்படாத வேதாகமங்களின் பாகமுமே ஆகும் என்கின்றனர். பகுத்தறிவுள்ளவர்கள் நடுவு நிலைமையோடு ஆராய்ச்சி செய்தவர்கள் எவரெனினும் இந்த நவமான கொள்கையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்களென நான் திடமாகச் சொல்லுகிறேன். இவ்விசாரணைச் சங்கத்தாரின் அறிக்கைப் பிரதியிலே திருமுறைகளிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலுமிருந்து பல மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தத் திருமுறைகளும் சித்தாந்த சாஸ்திரங்களும் வேதசிவாகமங்கள் இறைவனால் அருளப்பட்டனவென்று சாதிக்கின்றன. இப்படியானால் நவீன கொள்கை பூண்ட இவர்கள்; வேதசிவாகமங்களையல்லவா, தங்களுக்கு மேலான ஆதாரங்களாக எடுத்துக் காட்டவேண்டியவராவர். இல்லையேல் இவர்கள் கூற்று முன்னொடு பின் முரண்படுமன்றோ.

இனி, குறித்த விசாரணைச் சங்கத்தின் தலைவரே தங்கள் அறிக்கையில் ஆசங்கைக்கேதுவான விஷயங்களிருப்பதாக ஒப்புக் கொள்ளுகிறார். குறித்த அறிக்கையில் சமய குரவர்களான நமது சைவப்பெரியார்களை இழித்துரைக்கும் பகுதிகளுண்டு. இச் சபையார் தங்களுக்கு ஆதாரமாகக் கொண்ட 12 திருமுறைகளுள் 8 திருமுறைகளை இச்சைவ குரவர்களே இயற்றியுள்ளார்கள் (அறிக்கையின் 41-ம் பக்கத்திற் காண்க.)

தேவஸ்தானங்களைப் பாதுகாக்கும் சட்டம் இயற்றுவதைப்பற்றிய கிளர்ச்சி 1890-ம் ஆண்டில் சேர். பொன். இராமநாதன், சேர். அம்பலவாணர் கனகசபை முதலியபெரியார்களால் தொடங்கப்பட்டதென்பதும் குறித்த அறிக்கையிற் கூறப்பட்டது. அந்தக் கிளர்ச்சி காரணமாகவே தர்மகர்த்தாச் சட்ட விதி மதஸ்தாபனங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி அக் காலத்திலமைக்கப்பட்டது. அது மிகவும் திருப்தியான பிரமாணமெனக் கண்டு அப்பொழுதிருந்த முதலாவது தமிழ்ப் பிரதிநிதி இங்குள்ள இந்துமக்கள் சார்பாக அரசாங்கத்துக்கு நன்றி கூறியுள்ளார். (அறிக்கையின் 88 ம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

உ

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொத்தார் குரம்பை புகுந்தைவர்நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போன் மறுகுமென் சிந்தை மறுக்கொழிவி
அத்தா வடியே னடைக்கலங் கண்டா யமரர்கடம்
சித்தா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

—அப்பர் சுவாமிகள்.

[திருச்சத்தி முற்றமென்னுந் திவ்விய தலத்திற் கோயில்கொண்டருளிய சிவக்கொழுந்தீசுவரரே, தவத் துவாரங்களோடு கூடிய இந்த உடம்பின்கண்ணே ஐம்பொறிக ளென்னும் 5 பேர் உட்புகுந்து எப்பொழுதும் என் தஞ்சத்தைக்கெடுக்க, மத்தின்கண் அகப்பட்ட தயிரைப்போலச் சுழலுகின்ற என் மனத்திலுள்ள மாறுபாட்டைத் தவிர்த்தருளுக. என்னப்பனே! நமியேன் தேவரீரிடத்தில் அடைக்கலம் புகுந்தேனை தேவர்களுடைய சித்தத்துள் இருப்பவரே என்பது சொற்பொருள்.

பொத்து - பொந்து, துவாரம். குரம்பை - உடம்பு. ஐவர் என்றது இங்கே ஐம்பொறிகளை. புகல் - தஞ்சம், துணை. மறுகும் - சுழலுகின்ற, வருந்துகின்ற. ஒழிவி - ஒழியச் செய்க. அத்தன் - பிதா. இங்கே பரமபிதா.] (3)

## பிள்ளைகளைக் கொன்றவர்க்குப் 14 வருடக் கடுஞ்சிறை

முறையே ஐந்தரை வயதும், நாலரை வயதுமுள்ள தனது ஆண் குழந்தைகளைச் சடுதியில் எழுந்த மனச்சஞ்சலங் காரணமாகச் சுட்டுக்கொன்ற H. தாசன் பெரேராவுக்குக் கண்டி உயர்தர நீதிமன்ற விசாரணைப்போது 14 வருடக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. அச்சமயத்தில் நீதியாசர் பின்வருமாறு கூறினர்:—"இது நீசக் கலைக்கு இடமான பெருங் குற்றமாகும். எதிரி தன் பிள்ளைகளை வறுமை காரணமாக எழுந்த வைராக்கியத்தினாற் செய்ததாகப் புலப்படுகிறது. எதிரிக்கும் தன் பிள்ளைகளைக் கொன்ற கவலை மரணபரியந்தம் தீராது. ஆனாலும் செய்தது பெருங் குற்றமென்பதைப் பிறருக்கும் புலப்படுத்துவதற்காகவே இத் தண்டனையை விதிக்கின்றோம்".

## சாராய அபிவிருத்திக்குக் கள்ளுப்போதாக் கவலை

அரசினர் சாராய உற்பத்திச் சாலைக்குப் போதுமான கள்ளுக் கிடைக்கவில்லையாம். கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இந்த நேரத்தில், அதற்கு மாறாகக் கள்ளுச்சேர்ப்புக் குறைந்துள்ளதாம். கள்ளுச் சேர்ப்பதில் அதிக திறமையுடைய, இந்தியர்களை மேற்படி தொழிலில் அமர்த்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. மேலும், ஒருசிங்களத்தொழிலாளன் பத்துப் பதினைந்து மரங்களிலிருந்து இறக்கக்கூடிய கள்ளை, ஒரு இந்தியத் தொழிலாளி ஐந்து ஆறு மரங்களிலிருந்தும் இறக்கக்கூடுமாம்.

## நீதிமந்திரி கூறியவை

முப்பதினாயிரம் ரூபா வரையிற் செலவிட்டுக் கட்டப்பட்ட களுவாஞ்சிக்குடிக் கிராமநீதித்தலத்தை நீதிமந்திரி டக்டர் ராஜபக்ஷ திறந்துவைக்கும்போது பேசியவற்றின் சாரம்:— "உங்களுக்கு வேண்டியவற்றை யூ. என். பி. அரசாங்கம் நிறைவேற்றி வைக்கும்; கீழ் மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிர்மாணிக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்தில் சிங்களவர் உரிமை பாராட்டமாட்டார்கள். கிராமங்கள் அபிவிருத்தியடைவதற்காகத் தான் யூ என். பி. யுடன் உங்களை இணைத்துக் கொள்ள விரும்புகிறோம்".

## காதலால் நேர்ந்த சாதல்

சாவகச்சேரியிலுள்ள டிறிபேர்க் ஆங்கில கலாசாலையிற் கல்வி பயின்ற சுப்பிரமணியம் என்னுமொரு மாணவன, அந்தப் பள்ளிக்கூடத்திலேயே பட்டப்பகலிற் கழுத்திற் சுருக்கிட்டுத் தூங்கித் தற்கொலை செய்தானாம்; காரணம் குறித்த மாணவன் அக்கலாசாலையிற் பயிலும் ஒரு மாணவிக்குக் காதற்கடிதம் எழுதி அனுப்பிவிடத்து, அக் கடிதம் அங்குள்ள ஒரு உபாத்தியாயர் கையிலகப்பட, அந்த உபாத்தியாயர் அதனைத் தலைமை உபாத்தியாயரிடம் ஒப்புவிக்க, அவர் அதனைப்படித்துப் பார்த்துவிட்டு, அம் மாணவனுக்கு அவனுடைய தந்தையோடு இல்லையேற் பாதுகாப்பாளனோடு கூடிக்கொண்டு தம்மை வந்து காணவேண்டுமெனத் தெரிவித்தமைதானாம். காதற் கடிதம் எழுதப்பட்டமாணவியும் கிணற்றுள் வீழ்ந்து தன்னுயிர்விட முன்னிய போது மீட்கப்பட்டாளெனச் சொல்லப்படுகிறது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஹுல ஆவணி மீ உகஉ வெள்ளிக்கிழமை

## ஜப்பான் தொன்னிலை யடையுமா?

இற்றைக்கு ஏழு எட்டு ஆண்டுகட்குமுன் ஆசியாக் கண்டத்திலே பல்லாற்றானும் உன்னத நிலையோடுகூடியதாயிருந்த யப்பான், அயிரோப்பியர் அமெரிக்கரென்னுஞ் சாதியினர் அழுக்காறு கொள்ளுதற் கேதுவாயிருந்த ஜப்பான், உலக இரண்டாம் யுத்தத்தில் ஜர்மனியரோடு சேர்ந்தமையினல், அயிரோப்பியர் அமெரிக்கராற் பெரிதுந் தாக்குண்டு தோல்வியுற்றுப் பல்லாயிரக் கணக்கான மக்களைப் பகைவர்க்கு இரையாகக்கொடுத்து நாடு நகரெல்லாஞ் சிதைந்து இரண்டு ஊர்கள் அணுக்குண்டினாற் சாம்பராய்ப் போக அழிவுற்று அடிமைப்பட்டமை பலரறிந்த இரகசியம்; எந்தச்சாதியினர் இந்த ஜப்பானுக்கு அழிவு தேடினார்களோ, அந்தச் சாதியார்களும் அவர்களுடன் சேர்ந்து இன்னுஞ் சில சாதியினருமாக நாற்பத்தெட்டுச் சாதியினர் ஜப்பானை இப்பொழுது அதன் தொன்மை நிலையில் வைப்பதற்கு முயன்றுள்ளனர். "கெட்டார் தழையாரோ, கேடொருகால் நீங்காதோ" என்றபடி, நல்லாயிருந்து இடையிற் கேடடைந்தநாடு மீண்டு தொன்னிலையடைவது நூதனமல்ல.

ஜப்பான் தன்னிடத்தில் முன்னிருந்த ஏகாதிபத்தியம் சமத்துவம் சுதந்திரம் முதலிய எல்லா நன்மைகளையும் திறமைகளையும் பறிகொடுத்து விட்டமையினல், அவற்றை அந் நாட்டிற்குப் பழையபடி அளித்து அதனை உன்னத நிலையில் வைக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டே, குறித்த நாற்பத்தெட்டுச் சாதியினரும் யப்பானோடு ஒரு சமாதான உடம்படிக்கையைச்செய்துள்ளார்களாம்; இந்த உடம்படிக்கை ஸான்பிரான்ஸிஸ்கோ நகரிற் கைச்சாத்திட்டு நிறைவேறியது. இந்த உடம்படிக்கையில் இலங்கையும் பங்குபற்றியுள்ளது; இதனல் இனிமேல ஆசியாக்கண்டம் ஈடேறுமென்றும், இலங்கையரசும் இந்த உடம்படிக்கையிற் பங்குபற்றியிருப்பது பெருமைக்கிடமாகுமென்றும் இலங்கைப் பிரதமர் கூறிப் பெருமிதமடைகின்றார். மேல் நாட்டி லுள்ள "கம்யூனிஸ்ற்"கட்சியினரும ருஷியரும ஜப்பானை உன்னத நிலையில் வைக்க வேண்டுமென்று முயன்றமையை, திருசனநாயக, "வெள்ளாடு மழையில் நனைகிறதென்று வேங்கைய ழுதவாறும்" எனப் பரிகசித்துக் கூறுகிறார். திரு. சனநாயக சொல்வதின் உண்மையுமுண்டு; ஆனல் ஆசியாக் கண்டத்தின் ஈடேற்றத்திலே அதிக கண்ணுங்கருத்துமாயிருக்கும் திரு சனநாயக, இக் கண்டத்திற்றானே யுள்ள பாகிஸ்தானத்தை ஆதரிப்பதும் இந்தியாவையும் இந்தியரையும் புறக்கணிப்பதும் ஏனோ?

## சாராயம் வடிக்கக் கள்ளில்லாக் கவலை

சாராயம் வடிப்பதற்குப்போதிய கள்ளில்லாது முட்டுப்பாடுண்டாகுமானல், மதுபானத்தைநீக்கும் நோக்கங் கொண்ட அபிமானிகள் மகிழ்ச்சி யடைவர்; ஆனல்இந்தவிஷயத்தில்எங்கள் அரசினர் கவலைப்படுகின்றனர்; கஞத்துறைப்பகுதியிலுள்ள சாராயம் வடிக்கும் அரசாங்கத் தொழிற்சாலையிலே போதிய சாராயம் வடித்தற்குக் கள் வரத்து இல்லையென அதிகாரிகள் கவலைப்படுகின்றனர்; கள் வரத்தில்லாமைக்குக் காரணம் மரமேறிகளின் குழப்பமாம். நீடித்த காலமாக இக் கள்ளிறக்குந் தொழில் செய்துவந்தவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்த மரமேறிகளாவர்; இப்போது அரசாங்க மந்திரிப்பதவி வகித்திருக்கும் A. E. குணசிங்காவின் "இலங்கையர் மயமாக்கும்" பிரமாணம் அநுசரிக்கத் தலைப்பட்டபின், இந்திய மரமேறிகள் மீண்டு தம் நாட்டிற்குப் போய்விட, சிங்கள மரமேறிகளையே அரசினர் கள்ளிறக்குந் தொழிலிற்கு ஒழுங்கு செய்தனர்; ஆனால் சிங்கள மரமேறிகள் முற்கூலி வாங்கிக்கொண்டே தொழில்செய்வார்களென்றும்;தொழில்செய்யக் கிரமமாக வரமாட்டார்களென்றும் கட்டுக்கடங்கார்களென்றுஞ் சொல்லப்படுகிறது. இந்திய மரமேறிகள் பயபக்தியோடு கடமை செய்வார்களாம்; அவர்களைப் புறங்கணித்தமையினாற்றான் போதிய கள்ளிறக்குவித்து அதிக சாராயம் வடித்து ஊராருக்கு விற்று அரசிறையை அதிகப்படுத்த முடியாமல் அரசினர் இடர்ப்படுகின்றனராம். இக் கஷ்ட நஷ்டங்கள் மாத்திரமல்லாமல், அம்பாந்தோட்டை உப்பளத்தில் உப்பள்ளிச்சேர்க்கும் விஷயத்திலும் கூலிவேலை செய்வோர்பஞ்சத்தினாற் பெருந்தொகையான உப்பு இப்போது அங்குப் பெய்யும் மழையிற் கரைந்து பழையபடி உப்பு நீராகின்றதாம்; இந்திய கூலியாள் அங்கே இக்காலத்தில் அரிதாய் விட, இந்நாட்டுக் கூலியாளர் உப்பள்ளிச்சேர்ப்பதற்கு அதிகமான கூலிதரவேண்டுமென வற்புறுத்தி நிற்கின்றார்களாம். இவர்கள் இப்படி வேலைசெய்ய மறுப்பதினல், விளைந்த உப்புப் பழையபடி கரைந்துபோவது அரசினருக்கும் ஊரவர்களுக்கும் நஷ்டமாகவல்லவா முடியும்! இலங்கையர் மயமாக்கும அரசாங்க மந்திரி குணசிங்க முதலானோர் இவைகளையெல்லாஞ் சிந்தித்துக் கருமமாற்றுதல் நன்றாகும்.

## நாகதீபம் அல்லது நயினாதீவு

இலங்கையின் பெரும்பான்மை மக்களாகிய பௌத்தர்களுக்கும் சைவ மக்களுக்கும் பொதுவான யாத்திரை ஸ்தலமாக விளங்கும் இடங்கள் நம் நாட்டில் மிகச் சிலவேயுள. தென்னிலங்கையில் கதிர்காமமுண்டு. வட இலங்கையிற் கடலாற் சூழப்பெற்ற நயினாதீவு உண்டு. நாகதீபம் புராதனப் பெருமைவாய்ந்த புனித ஸ்தலமாக விளங்குகின்றது. புத்தர் தரிசித்த தலமாதலால், பௌத்தர்கள் இதனைத் தங்கள் புனித ஸ்தலங்களுள் ஒன்ருகப் போற்றுகின்றனர். நாகபூஷணி அம்மாள், சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத் தொடக்கமாகக் கோயில்கொண்டெழுந்தருளித் தண்ணளி பாப்பி வருவதால், சைவ அன்பர்கள் பல பாகங்களிலிருந்தும் வந்தடைகின்றனர். எனவே நாகதீபம் இப்பொழுது பௌத்தர்களும் சைவர்களும் நாடோறும் யாத்திரை செய்யும் புனித ஸ்தலமாகக் காட்சியளிக்கின்றது.

### சிறந்த துறைமுகம்:

நயினாதீவு பண்டைக் காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கியது. தென்னிந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையினல், தமிழ்நாட்டுக்கப்பல்களும அந்நிய நாட்டுக் கப்பல்களும, இத்தீவுத் துறைமுகத்தில் தங்கிச் சென்றிருத்தல்கூடும. இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றுமுண்டு. மேற்குப் பகுதிக் கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்களை, படகுகள் போக்குவரத்துச் செய்யக் கூடியனவாகவும் இருக்கின்றது. நாகம்மாள் கோயிலிலுள்ள சிலாசாஸனமும் இக் கொள்கைக்கு ஆதாரமளிக்கின்றது.

### நாக வழிபாடு:

நாகத்தை வழிபடும் வழக்கம் பன்னெடுங்காலமாகத் தமிழரிடையே காணப்பட்டிருந்தது. ஏன்? இக்காலத்திலும் கூட அவ் வழக்கம் இருப்பதைக் காணலாம். நாக வழிபாடு இக்காலத்தில் அருகிவிட்டதெனினும, நாகம்மாள் ஆலயம் அதனைச் சைவ மக்களுக்கு இன்றும் ஞாபகமூட்டி நிற்கின்றது. இக்கோயிலின் பூர்வீக வரலாறு, காலமென்னும் திரையால் மறைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி அநேக கதைகளுண்டு. இதன் புராதன வரலாற்றைப் பார்க்கிலும் தற்போதைய நிலைமையே சைவ மக்களுக்குப் பெரிதும் பயன் அளிப்பது. இவ்வாலயம் சமீபத்திற் புனருத்தாரணஞ் செய்யப் பெற்றுள்ளது. சில வாண்டுகட்கு முன்னர், கிழக்கு வாயிலில் அழகிய கோபுரமொன்று அமைக்கப்பட்டது. இப்பொழுது மூலஸ்தானத்தில் அழகியதோர் விமானம் கட்டப்பெற்றுள்ளது. மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தையும் நாகப் பிரதிஷ்டையையும் கண்ணுற்ற சிற்ப வல்லுநரான திரு. வை. மு. நரசிம்மனும் விமானத்தைக் கட்டும் திருப்பணியைச் செய்த காரைக்குடி திரு. ரம். செல்லக்கண்ணு ஸ்தபதியும் மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தை யும் உற்சவ விக்கிரகத்தையும் புகழ்கின்றனர். மூலஸ்தானத்திலுள்ள நாகப் பிரதிஷ்டை மிகமிகப் பழைய காலத்தில் ஏற்பட்டதென இவர்கள் கருதுகின்றனர்.

### இரதோற்சவம்:

நாகபூஷணி அம்பாளின் சாந்நித்தியத்தையும தேஜோமயத்தையும் அருளொழுகு வதனத்தையும் நீங்கள் காண விரும்பினல், இரதோற்சவத்துக்கு ஒரு முறை சென்று பாருங்கள். ஆனி மாதத்தில் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வடபகுதிக்கு யாத்திரீகர்கள் திரள் திரளாகச் செல்வதைக் கண்டால் அவர்கள் நயினாதீவுநாகம்மாள் ஆலயத்துக்கே செல்லுகின்றனர் எனக் கூறிவிடலாம். ஆண்டுதோறும் ஆனிமாசத்துப் பூரணைத் தினத்தன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது. இலங்கையின் வடபகுதியிலுள்ள பல துறைகளிலுமிருந்து வத்தைகளும, வள்ளங்களும பாய்விரித்தோடிய காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இக்காலத்திற் கடல் அலைகளைக் கிழித்து நாவாய்களை முந்திக்கொண்டு யந்திர வள்ளங்கள் செல்வதைக் காணலாம. இலங்கையிலுள்ள சைவ மக்கள் ஆண்டுகொருமுறையாவது ஆனி மாதத்தில் நடைபெறும் திருவிழாக்காலத்திற் சென்று அம்பிகையின் திருவருளைப் பெற்று மீள்வது வழக்கம்.

பால்நினைந்தூட்டும் பரிவுள்ள சர்வலோக நாயகியாகிய நாகேஸ்வரி கருணைத் திருக் கோலத்துடன் எழுந்தருளி பக்தர்களுக்கருள் புரியுங் காட்சியைக் கண்டு கல்நெஞ்சக் கள்வனும் கசிந்து கண்ணீர் மல்கி வாய்விட்டலறுவதைக் காணலாம. அலங்காரத்தோரணம் வீதி வலம்வந்து இருப்பு ஸ்தானத்துக்கு வந்ததும், நயினாதீவுக் கடற்கரையோரமாக வரிசையாக அன்னப்பட்சிக் கூட்டம்போலக் கிடக்கும நாவாய்களிலே ஏறியிருந்த சனங்கள் கரகோஷஞ்செய்து தாங்களும் புறப்பட ஆயத்தஞ் செய்வார்கள். தேர் இருப்புக்கு வந்தபின்புதான் நாவாயக்காரர் பாய்விரித்தோடச் சம்மதிப்பார்கள். இதற்குமுன் நாங்கள் புறப்பட விரும்பினும நயினாதீவுத் துறைமுகத்திலிருந்து அசைய முடியாது. —ஸ்ரீ லங்கா.

### திருவடிநிலையில் தீர்த்தத் திருவிழா

இந்த ஆவணிமீ க0-ந் தேதி (26-8-51) காலை 3 மணி வரையில் பொன்னாலை வரதராசப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை முதலின நடந்தபின், மேற்படி பெருமான் இரதாரோகணராகி 2 மைலுக்கப்பாலுள்ள திருவடிநிலை என்னும் திவ்விய ஸ்தானத்தை அடைந்து, புண்ணிய தீர்த்தம எனப் புகலும் சமுத்திரத்தில் தீர்த்தம் கொடுத்தனர். அச்சமயத்திற் பல்லாறாக் கணக்கான பக்தர் தீர்த்தத்தில் திளைத்துப் பெருமானுக்கிரகத்தைப்பெற்றுச் சென்றனர். —உடிதா.

## புகைரதத்திற் களவு

வியாங்கொடையிலுள்ள ஒரு ஐக்கிய சமாசத்தின் முகாமைக்காரனாகிய W. A. D. தருமசேன என்பவர் மேற்படி சங்கத்திற்குரியபணம் 12300 ரூபாவையெடுத்துக்கொண்டு வியாங்கொடையி லிருந்து கொழும்பிற்குப் புகைரத மார்க்கமாகப் பயணம் பண்ணும்போது இடைவழியில், அந்தப் புகைரதப் பெட்டியுள் ஏறிப் பிரயாணஞ் செய்த இருவருள் ஒருவன் கிறிஸைக் காட்டி அவரை வெருட்ட மற்றவன் பணப்பையைப் பறித்துக் கொண்டு குதித்தோட மற்றவனுங் குதித்தோடி, சற்றுத் தூரத்தில் அவர்களை எதிர்பார்த்து நின்ற ஒரு மோட்டாரதத்தில் ஏறி விரைவாகச் செலுத்தச் செய்து மறைந்துவிட்டார்களாம். வியாங்கொடைப் பொலிசர் குறித்த ரதத்லையும் சந்தேகத்தின்பேரில் இருவரையும் அகப்படுத்தியுள்ளனராம்.

## காகிதத் தொழிற்சாலை அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பைச் சேர்ந்த வாழைச்சேனையில் அரசினர் அமைத்துக் காகிதமாக்க, உத்தேசித்திருக்க தொழிற்சாலையின் பொருட்டு சென்ற புதனகிழமை தொழிற்பகுதி மந்திரி முறைப்படி தெய்வ வழிபாடு செய்து அத்திபாரமிட்டனர். பட்டிருப்புப் பகுதிப் (பாராளுமன்றப்) பிரதிநிதியாகிய திரு. எஸ். வி. எதிர்மன்னசிங்கம் முதலான பலர் அங்கு வந்து கூடினர். குறித்த காகிதத் தொழிற்சாலை, இந்த இலங்கைக்குப் பிரதானமான இந்த வேலையில் இன்றியமையாத தெனவும், தண்ணீர்ச் சௌகரியம், காகிதமாக்குதற்கு முதற்காரணமாகிய புல் வைக்கோல முதலானவைகள் அங்கே கிடைக்குமெனவும், ஆதலினாலே வாழைச்சேனையே காகிதத் தொழிற்சாலைக்கு ஏற்ற ஸ்தானமாகுமென்றுங் கூறி முடித்தார்.

## சனசமூக சேவா சங்கம் அச்செழு

மேற்படி சங்கப் பகிரங்கக் கூட்டம் ஒன்று 8-9-51 சனிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் வடமராட்சிப் பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. தா. இராமலிங்கம் தலைமையில் ஆரம்பமானது. கிராமத்தின் சமூகசேவா நலன்களைப்பற்றி வித்துவான் எஸ். சுப்பிரமணியம், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, ஆசிரியர் கே. வி. சதாசிவம் ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். —கடித

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
- எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## சைவ சமயமும் - அதன் சிறப்பியல்புகளும்

சமய வாழ்வே அறவாழ்வு! அவ்வாழ்வே பண்புநெறி வாழ்வு! இருப்பது பொய், போவது மெய் என்ற உண்மை நெறியை விளக்கி நிற்பது சமயம்; பொய்யாய செல்வத்தே, நாளும் புக்கழுந்திக் கிடக்காதே என்றறிவிப்பது நம்சமயம்; வைத்த நிதியும், பெற்ற பெண்டிருமே சிறந்ததென வாழ்வதைத் தவிர் எனப் பறைசாற்றுவதே நம்சமயம்; ஆசையறுத்து அருமையான இறைவழி வாழ்வை வாழுங்கள் என்றெடுத்துரைப்பதுதான் நம்சமயம்; சித்திகாரக் கலக்கம் தெளிவித்து வித்தகச் செந்நெறியைப் புகட்டி வாழவைப்பது நம்சமயம்; இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனுனும் தன்னைச் சேர்த்தக்கால் புகலிடம் அளித்து, வாழவைப்பது நம சமயம்; மரணம் பிறப்பென்ற இவையிரண்டின் தன்மையை மயக்கறுத்து, நம்மை எண்குணத்தான் திருத்தாளிணையைச் சேர வழி வகுப்பதே நம் சமயம்.

செம்மை வாய்ந்த சிறிய குணங்களைக் கொண்டு, வாழ்க்கையைச் சிறக்க வைத்துக்கொளவதற்கே நம் சமயம் உறுதுணைபுரிகிறதெனச் சுருங்கக்கூறலாம். குறிகளும், அடையாளங்களும் ஏதோ ஓர் அளவிற்குச் சமயத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்வன போன்றிருப்பினும், அதனுள் அமிழ்ந்து கிடக்கும் அரிய கருத்துக்கள் மக்களையே சீர்தூக்கி நல்வழிப்படுத்தி நிற்கின்றன. தீநெறியில் உழன்று வாழுநரை நல்வழிப்படுத்தி, வழித் துறைகளை வகுத்தளிப்பதும் சமயமே!

நம் சமயத்தில், அணையா நல்ல கொள்கைகளையும் அதன்பால் ஏற்றி அவற்றை இறைவனுக்கு ஒப்புமைப் படுத்திவைத்தனர் ஆன்றோர். அடியார்கள் அக்காலந்தொட்டு, இக்காலம்வரையிலே பயன் உள்ள உண்மைகளையே அறிவுறுத்தி வருகிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய ஒரு சமயத்திலதான் பொன்னெனப்போற்றத்தகும் பொன்மொழிகள் உள்ளன என இறுமாப்புக் கொள்ளுகின்றனர் ஒரு சாரார். அவையோ நம் சமயத்தில கருத்துரைகளெல்லாம் உருமாறி நிறம் மாறி அங்கே உற்பவித்துள்ளன. அன்றியும் மற்றச் சமயங்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் நாம் திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் பயிலும் ஆத்திசூடி கொன்றைவேந்தன் போன்ற அளவிற்சிறிய, கருத்தில் உயர்ந்த நூல்களில காணப்படுகிறவையே. எந்த ஒரு சமயமும் பொய் பேசவாகிலும், வேறு எவ்வித தீச்செயல்கள் புரியவோ போதிக்கவில்லை. சில சமயங்கள் தாங்கள் நின்ற படியே முடிவானதெனக் கூறும். உலகமறியாக் கிணற்றுத் தவளையே போல. அங்ஙனம் நிற்பதை விடுத்து மேலும் மேலும் ஊடுருவி ஆராய்ந்து உண்மை காண்பதே சமயவாழ்வின் முன்னேற்றத்திற் குரிய இலக்கணமாகும். புறச் சமயங்கள் புகலும் கருத்துக்கள் எல்லாம், மாடிவீட்டின் முதற்படியேயாம் என்க. சைவசமயத்தின் தொன்மை நிலையை ஆராயவோர்க்கு உண்மை புலனாவது நிச்சயம். —சித்தார்த்தம்.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (16-9-51—22-9-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரத்திற் குடும்ப சந்தோஷமுண்டாம்; பிரதானமான கருமங்கள் அநுகூலப்படாவிட்டாலும் பண வருவாயும் சந்தோஷ வாழ்க்கையுமுண்டு; எதிரிகளையும் வெல்லலாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

முயற்சியோடுகூடிய வாரம்; சனசமூக உழைப்பிலுஞ் சித்தியுண்டு; இந்தக் கிழமை முடிவதன்முன் பிரதானமான ஒரு கருமம் ஒழுங்குக்குவரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

புதிய முயற்சிகளைச் செய்வதற்கு ஏற்ற வாரம். குடும்பத்தாற் சந்தோஷமும் மனச் சமாதானமுமுண்டு; புதிய கருமங்களைத் தொடங்கிச் செய்க; கிழமை முடிவிலே தூர தேசத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

சந்தோஷத்தோடு கூடிய வாரம்; யோசனைகளுள்ள கருமம் முற்றுகும்; குடும்ப விஷயத்திலோ பார்க்கும் கருமங்களிலோ நன்மைக்காகிய மாறுதல்களுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் எதிரிகளை வெல்லலாம்; கிழமையின் முதலிரு நாளும் அவதானமாக நடந்துகொள்ளவும்; தேகசுகமுமுண்டாம்; கிழமை முடிவில் நிலையான சில நன்மைவரும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பணவிஷயமாக அநுகூலமான வாரம்; ஆனல் மன ஆறுதலில்லை; வாரத்தின் முற் பகுதியில் தேகசுகம் குன்றும்; பிரதானமான கருமங்களை இப்பொழுதைக்குத் தொடங்காமல் தவணையிடுக.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

செய்யுங்கருமங்களிற் சில மாறுதல்கள் உண்டாகக்கூடும்; மனச்சோர்வு முண்டாம்; வியாழன் தொடக்கம் சனிவரை அவதானமாக நடந்துகொள்ளவும்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பார்க்கும் விஷயமாகவோ, பண விஷயமாகவோ நன்மையான வாரம்; ஆனற் சனிக்கிழமை மாத்திரம் அப்படியல்ல வீட்டுக்கருமங்களிற் சில திருத்தஞ் செய்ய வேண்டிவரும்; எதிரிகளை வெல்ல இடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ்வாரத்திற் கடன் நீங்கும்; புது முயற்சியால் நினைத்த கருமம் கைகூடும்; நண்பர் விஷயத்திலும் சனசமூக விஷயத்திலும் நன்மையுண்டு.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இவ்வாரத்தில் ஆறுதலில்லை; நண்பருந் துரோகஞ் செய்யக்கூடும்; இனத்தவர்களாற் பொருட்செலவுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

இந்தக்கிழமை சனசமூக விஷயமாக அநுகூலமும் கீர்த்தியுமுண்டு; புதிய நட்பினுல் உதவியுண்டாம்; காத்திராப்பிரகாரம் லாபமும் கீர்த்தியும்வரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

தூரதேசத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும்; நண்பர்களாற் பெரும் உதவியுண்டு; குடும்பவிஷயத்திலும் திருத்தங்களுண்டு; சத்துருக்களை வெல்லலாம்

## பெண்கள் பணம் பறிக்கும் புதிய முறை

கொழும்பிலே இரண்டு மூன்று ஆருடிப் பெண்கள் சஞ்சரிக்கிறார்களாம்: இவர்கள் அப்பட்டினத்தின் வீதிகளில் தனியே சாரதியுடன் இல்லையேற் சொந்தக்காரனுடன் நிற்கும் மோட்டார் ரதத்தண்டை போய், தங்களுக்குச் சுகவீனமாதலால் தங்களை அந்த ரதத்திற் புண்ணியத்திற்கு ஏற்றிக்கொண்டுபோய் இன்ன இடத்தில் இறக்கிவிட வேண்டுமென்று இரந்து கேட்பார்களாம்; “பெண்ணென்றாற் பேயுமிரங்குமல்லவா!” அந்த வஞ்சகி சொல்வதை நிசமென்று நம்பி, இரதத்திலுள்ள சாரதியேனுஞ், சொந்தக்காரனேனும் மனமிரங்கி ஏற்றிக் கொண்டுபோக அவள் குறித்த இடத்தில் இறங்குவதற் கிடையில், ரதத்தின் திறப்பைச் சுரோலென எடுத்து வைத்துக்கொண்டு ஒரு குறித்த தொகைப் பணந் தந்தாற்றான் திறப்புத் தருவதாகச் சொல்லுவாளாம். இரதத்திற்குரியவன் திறப்பைப் பறிக்க முயன்றால் “உன்னை எல்லாருமறியத் தூற்றி மானங்கெடுப்பேன்” என்று வெருட்டுவாளாம்; இப்படியான வஞ்சகிகளிடஞ் சிக்கிச் சில சாரதிகள் சொந்தக்காரர் அறிதிலே தப்பித் திறப்பையும் மீட்டுப் பெற்றுக் கொண்டார்களாம்; ஆனல் ஒருவர் இருவர் இவ் வஞ்சகிகட்கு இருபத்தைந்து முப்பது ருபா கொடுத்துத் திறப்பைப் பெற்றார்களாம். இந்த ஆருடிப் பெண்களின் வஞ்சகச் செயலையுணர்ந்த பொலிசர், மோட்டார்த மோட்டுவோர்களைப் புத்தியாக நடக்கும்படி எச்சரித்துவிட்டு இந்த நீலிகளை அகப்படுத்தத் தேடித்திரிகிறார்களாம்.

## அனுதாபக் கூட்டம்

இம்மாதம் 4-ந் தேதி இரவு, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க ஆதரவில் அச்சங்கத் தலைவராயிருந்து கடமையாற்றிய திரு. என். வைத்திலிங்கம் B. Sc, (Lond) மறைவைக் குறித்து ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது.

அத்தருணம் யாழ்ப்பாண நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை தலைமை வகித்தார். திரு. எஸ். சிவபாதசுந்தரம், அவரது அறிவு ஆற்றல் முதலியனவற்றை எடுத்துக் கூறியபின்னர், திரு. வைத்திலிங்கம் பூதவுடம்பைவிட்டு நீங்கினலும், அவரின் ஞாபகம் ஆசிரியர்களின உள்ளங்களிலும், இளைஞர் இதயங்களிலும் பதிந்து கிடக்குமென்றும் சொல்லினர். இதன்பின் திரு. எம். பாலசுந்தரம், ஆசிரியர் திரு. கே. தம்பையா என்பவர்கள் அவர் கிராமத்துக்குப் புரிந்துவந்த பெருஞ் சேவைகளை எடுத்துப் பாராட்டினர். — கடித

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: “JEWELLERS”
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

# ரேடியோ

## ✻ இசைத்தட்டு

**திருச்சி வெள்ளி செப்டம்பர் 14**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஆர் வசந்தா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1 ஆரம்பம்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல்* 2 தமிழில்செய்தி 2 10 டெல்லி ஸ்டுடியோ வாத்யகோஷ்டி* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழ்ச்செய்தி 7 30 சந்திரிகையில் கதைதொடர்காவல் 7 45 இலக்கியவாசகம் 8 ஆர் வசந்தா பாட்டு 8 30 நாலவகை 9 ஆங்கிலத்திற்செய்தி 9 15 திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 10 முடிவு.

**திருச்சி சனி செப் 15**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 என் லக்ஷ்மிநாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ராம்கோபால் வாத்ய கோஷ்டி* 2 தமிழில்செய்தி 2 10 சர்வகலாசாலைகளுக்கு 2 25 லதாமங்கேஷ்கர்* 2 45 முடிவு.

மாலை 5 30 ருத்பீன் ஆ. இ. ரே. வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 வி வி சடகோபன் பாட்டு வி கோவிந்தசாமி நாயக்கர் வயலின் பாலக்காடு கே ருஞ்சமணி மிருதங்கம் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 ராஜ்பாஹுதேவ் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு செப் 16**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி சதம்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 சோமனவல்லி ஸ்ரீநிவாசன் திருவாய்மொழிகள்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 நாலவகை* 2 தமிழில்செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு

மாலை 5 30 வத்தராயிருப்பு வி மீனும்பாள் ராமசாமி வீணை 5 45 பவானி பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 நாட்டுப்பாடல சொல்லும்நாகரிகம் 8 கும்பகோணம் பானுமதி பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 வத்தராயிருப்பு வி மீனும்பாள் ராமசாமிவீணை 10 முடிவு

**திருச்சி திங்கள் செப் 17**

7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஓ வி சுப்பிரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள்கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வயலின்* 2 தமிழில்செய்தி 2 10 கொலம்பியா ஸ்டுடியோ வாத்யகோஷ்டி* 2 15 ஆங்கிலப்பேச்சு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 புல்லாங்குழல் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 பூர்வீகளின்தொல்லை பேச்சு 8 தானவாத்யக்கச்சேரி 8 30 சீலம்மா கடம்பி வீணை, பாட்டு * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஓ வி சுப்ரமணியம் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் செப் 18**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 திருத்தாங்கூர் ஆர் செல்லப்பாபாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1ஆரம்பம் * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 எம் எஸ் சுப்புலக்ஷ்மி* 2 தமிழில்செய்தி 2 10 ஆர்கன் ஆலின்சாஸ் பீகோசாப்ரா*

2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 மதுரை பி ஷண்முகம்பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருத்தாங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 ஜர்து வருஷதிட்டம் 7 45 மதுரை என் சோமசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 மதுரை பி ஷண்முகம்பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

1-ம் பக்கத் தொடர்ச்சி

பக்கம் பார்க்க) அப்படியிருக்க இப்பொழுது புதிதாகக் கட்டுப்பாட்டுச் சட்ட மியற்றுவதற்கு ஆதாரமாக 1917ம் ஆண்டுக்கு முன் நடந்த கிளர்ச்சியை எடுத்துக்காட்டுவது தவறுகும். புதிய தேவஸ்தானச் சட்டமியற்றுவதற்குப் பூரண ஆதரவு இருக்கிறதெனக் குறித்த விசாரணைச் சபை தெரிவிக்கின்றது. குறித்த விசாரணைச் சபை தாம எவ்வாறு புதிய சட்டத்தை ஆக்கப் போகின்றதெனபதை, தம் முன் சாட்சியம் சொல்லச் சென்றவர்களுக்கு முன் ஒருபோதுங்கூறவில்லை அப்படிக்கூறியிருந்தாலல்லவா அவர்களின் சம்மதத்தை அறிந்திருக்கலாம். அடி சபை தமது அறிக்கைப்பத்திர மூலமாகவே முதன் முதல வெளியிட்டது. இப்படியானல் பூரண ஆதரவு உண்டென்று எப்படி அவர்கள் சொல்ல முடியும?

இவ்விசாரணைச் சபை இப்போது பிரேரித்திருக்கும் புதிய சட்டம் சைவக் கோயில்களுக்கும், சைவ சமயத்துக்கும் முடிவு தேடத்தக்கது. தெய்வ சந்நிதிகளை அவற்றின் பக்தர்களிடமிருந்து பறிமுதலாக்கி ஒரு அரசாங்கத்திடம் இல்லையேல் அரசாங்கத்தின் ஒரு பகுதியிடம் ஒப்படைப்பதை நாம ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்வதைக் காட்டிலும் சைவக் கோயில்களை இடித்தழித்துவிடல் நல்லதெனலாம். அதிகார வர்க்கத்தினரின் தொடர்பு வஞ்சகஞ்சுமிழும் நாகத்தின் தொடர்புபோல அஞ்சத்தக்கதெனறும் கருதப்பட மாணிக்கவாசக சுவாமிகளும் கூறுகிருர்."

## திரு. V. நல்லையாவுக்குப் பிரதிமந்திரிப் பதவி

பிரதம மந்திரிப் பதவியோடு இன்னுஞ் சில மந்திரிப் பதவிகளைத் தாமே ஏற்று வைத்திருக்கும் திரு. D.S. சேனநாயக வருகிற அக்டோபர் மாசம் 8-ந் தேதி வரையில இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்குச் சென்று சிலகால் அங்குத் தங்கி அதேமாசம 28-ந் தேதிவரை மீண்டுவர உத்தேசித்திருப்பதால், மட்டக்களப்புப் பிரதிநிதியாகிய திரு. V. நல்லையா சுகாதாரப்பகுதி தலத்தாபனப் பகுதிகளின் பிரதி மந்திரியாகக் கடமை பார்ப்பாராம்.

## பெயர் மாற்றம்

நல்லூர் கிழக்கு, கணபதி இராமுப்பிள்ளை யெனவும், வேலுப்பிள்ளையெனவும் இவ்வளவு காலமும் வழங்கப்பட்டு வந்த நான், இத் தேதி (11 - 9 - 51) தொடக்கம் என் பெயரை கணபதி வேலாயுதபிள்ளையென மாற்றியிருக்கிறேன் என்பதை இதனுற் சகலருக்குந் தெரிவிக்கின்றேன்; நானும் இன்று தொடக்கம் க வேலாயுதபிள்ளையென்றே எச்சாதனத்திற்கும் கையெழுத்திடுவேன்

இங்ஙனம்

கணபதி வேலாயுதபிள்ளை.

நல்லூர் கிழக்கு

11—9—51.

M 96 11, 14—9—51.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம் இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

td. 14 20-11-46—20-11-9

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2

# சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, செஞ்செரிவு, கைகால் வலி, சுதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைகுறைவு, சூலை, சத்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல சொவ்ய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
காலறுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செவவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

எமது சோல் ஏசன்றுகள்

| 1 மோகன் அன் கொம்பனி<br>No. 66 முதலாம் குறுக்குத்தெரு<br>கொழும்பு | 2 நவலெட்சுமி புத்தகசாலை<br>செட்டியார் தெரு<br>கொழும்பு |
| --- | --- |

K. ஆறுமுகம்பிள்ளை
நி: தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

எமதுவிலாசம்

M 93


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday September 14 1951